**தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களம்.**

---

**1. நிதிக்கூற்றுக்கள்.**

**1.1 அபிப்பிராயம்.**

வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் அடங்கிய பொழிப்பு அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு 2020 மே 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை.**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு.**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (1) (இ) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு.**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரிய-தாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | திணைக்களத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினுடைய நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற் கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு.**

**3.1. கடமைகள் நிறைவேற்றப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை. |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளை பொறுத்தவரை, சுங்க கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க கொள்கைகளின் பிரகாரம் தீர்வை வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல், வரி தள்ளுபடி நடவடிக்கைககளில் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.<br>எனினும் அச்செயற்பாடுகளுக்குரிய 2019 ஆம் ஆண்டின் வர்த்தமானி கணக்காய்வு திகதியான 2020 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க கொள்கைளின் பிரகாரம் வரி பதிவழிப்பு மற்றும் விட்டுவிடல், வரி தள்ளுபடிகள் தொடர்பான தகவல்களை வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குவதாகவும் நாட்டில் காணப்படும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வெளியிட முடியாமல் இருந்ததாகவும் 2020 திசெம்பர் முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அடைய வேண்டிய 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக திணைக்களம் தமது கவனத்தை செலுத்த வேண்டிய போதிலும், 2019 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் உள்ளடங்கலான ஏனைய திட்டங்கள் தயாரிக்கப்படவில்லை. | அடைந்து கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் அந் நோக்கங்களை அடைந்துகொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

5. **மனித வள முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 11 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளதுடன், அது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 18 சதவீதமாக இருந்தது. இவ்வெற்றிடங்களில் சிரேஷ்ட மட்டத்தில் 02 பதவிகள் வெற்றிடங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இப்பதவிகளின் வெற்றிடங்கள் காணப்படுவது நிறுவகத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்குமானால் அவ்வெற்றிடங்களை நிரப்வுதற்கும் அவ்வாறான தாக்கங்கள் இல்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை திருத்தம் செலுத்த நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. | 2020 ஒக்தோபர் மாதம் வரை இவ்வெற்றிடங்களில் 4 நிரப்பப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |